ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்**

21.08.2025

1. வேலவா கந்தா போற்றி போற்றி
   வினை அறுக்கும் மார்க்கம் தந்து
   காலனை வெல்லும் வழிகாட்டி
   காத்திடும் ஆறுமுகா போற்றி போற்றி
2. போற்றியே ஆறுமுக அரங்கனும்
   புகலுவேன் விசுவாவசு யாளி திங்கள்
   ஆற்றல்பட முதல் குருவார அருளாசி
   அருளுவேன் சன்மார்க்க நெறிமுறை கூறி
3. கூறிட அகத்தியர் சன்மார்க்க சங்கம்
   குருபரனே எனக்கு அருளியே
   நெறிமுறையாக யானும் பின்பற்றி
   நிலவுலகில் உங்களுக்கு அருளிவர
4. அருளிவர அரங்கன் என் வழியில்
   அனைவரும் வந்து கலந்து
   அருள்மிகு பிரணவக் குடிலின்
   அனைத்து பூசை விழாக்கள் கலந்து
5. கலந்துமே ஆசிதனை பெற
   கந்தப் பெருமான் உபதேசித்த
   பலந்தரும் சுத்த சன்மார்க்கத்தை
   பற்றியே நாம செபம் போற்றி
6. போற்றியே சைவ நெறியாளராக
   பிறர் துன்பம் அகற்றுகின்ற
   ஆற்றல் மிக்க தருமவான்களாக
   அன்னதான சேவையை ஏற்று
7. ஏற்றுத் தொண்டுகள் செய்து
   இயன்ற வண்ணம் பொருளுதவி
   மாற்றம் கருதி செய்து வர
   மகான்களின் ஆசி அனுகூலம்
8. அனுகூலம் உரியவர்கள் ஆகியே
   அரங்கன் என் தேடல் வழி
   ஞானவான்களாகச் சிறந்துமே
   ஞானவாழ்வுக்குத் தகுதி அடைவர்

9. அடையவே ஆறுமுகப் பெருமான்
அருட்சோதி வழி அரங்கனாக
தடையின்றி காட்சிதனை தர
தக்க அனுகூலம் கண்டவர்கள்

10. கண்டவர்கள் கண்டம் பிணி அகன்று
கலியில் ஆயுள் ஆரோக்கியம்
தொண்டராய் தூய அடியவராய்
தொண்டால் சிறந்து உயர்வர்

11. உயர்வை தந்து சகல வகையிலும்
உயிர் காக்கும் பிறவாமை தரும்
தயவான அரங்கன் என் குடில் வர
தலையெழுத்து மாறுமப்பா என்பேன்
ஆறுமுக அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி